பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 06 2025 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச யோகா தினம் இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

2. விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு லட்சக்கணக்கான மக்களுடன் இணைந்து யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டார்.

3. பயங்கரவாதத்தால் இனி இந்தியா பாதிக்கக்கூடிய நாடாக இருக்காது, மாறாக பதிலடி கொடுக்கும் நாடாக இருக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

4. சென்னையில் புதுப்பிக்கப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்.

5. சர்வதேச ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா பட்டம் வென்றார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

‘ஒரே பூமி – ஒரே ஆரோக்கியம்’ என்ற கருப்பொருளில் 191 நாடுகளில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விசாகப்படடினத்தில் இன்று காலை நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு லட்சக்கணக்கான மக்களுடன் இணைந்து யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், யோகா தினத்தை முன்னிட்டு விண்வெளியிலும், நிலத்திலும், கடலிலும் யோகா பயிற்சி நடைபெறுவதாக தெரிவித்தார்.

கிராமங்களில் நடைபெறும் யோகா நிகழ்ச்சியிலும் பொதுமக்கள் பங்கேற்றுள்ளதையும் அவர் குறிப்பிட்டார்.

எல்லைகளைக் கடந்து உலகம் முழுவதும் இன்றைய தினம் யோகா பயிற்சி நடைபெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் யோகாவை விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது என்றும், இதற்கு அறிவியல் அடிப்படையிலான ஆராய்ச்சிகள் உதவி வருவதாகவும் பிரதமர் கூறினார்.

யோகாசனத்துடன் சான்றளிக்கப்பட்ட சிகிச்சை முறையையும் இந்தியா ஊக்குவித்து வருவதாகவும்,

புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் இத்தகைய சிகிச்சை வெற்றிகரமாக அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதயம் மற்றும் நரம்பியல் பாதிப்புகளுக்கு சிகிச்சையளிப்பதில் யோகா முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், பெண்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஆரோக்கியமாகத் திகழ யோகா உதவுகிறது என்றும் திரு. மோடி கூறினார்.

விசாகபட்டினம் கடற்கரையில் 26 கிலோ மீட்டர் நீள நடைபாதையில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் 3 லட்சத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இது கின்னஸ் சாதனை முயற்சியாகவும் கருதப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் பிரதமருடன், ஆந்திரப்பிரதேச மாநில ஆளுநர் திரு. சையத் அப்துல் நஸீர், முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் உட்பட ஏராளமானோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

நாடு முழுவதும் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட இடங்களில் சர்வதேச யோகா தினத்தையொட்டி பொது இடங்களில் நடைபெற்ற யோகா பயிற்சியில் சிறுவர்கள், பெண்கள், மூத்த குடிமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

மதுரையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்ட மாபெரும் யோகா நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கலந்துகொண்டார்.

சென்னை தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ மையத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொண்டார்.

சென்னை நந்தனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கலந்துகொண்டு பொதுமக்களுடன் இணைந்து யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டார்.

சேலத்தில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் மத்திய எஃகு அமைச்சர் திரு குமாரசாமி தேவகவுடா கலந்துகொண்டார்.

தமிழகத்தில் செயல்படும் மத்திய அரசின் அலுவலகங்களிலும் யோகா நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதில் ஆயிரக்கணக்கன ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

முப்படையினர் கலந்துகொள்ளும் யோகா நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது.

சென்னையில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் யோகா ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர்.

கோவை, திருச்சி, மதுரை, கடலூர், திண்டுக்கல், நாகர்கோவில், கன்னியாகுமரி, திருநெல்வேலி உட்பட அனைத்து நகரங்களிலும் சர்வதேச யோகா தினம் பல்வேறு வகையான யோகாசன பயிற்சிகளுடன் கொண்டாடப்பட்டது.

<<<<>>>>

பயங்கரவாதத்தால் இனி இந்தியா பாதிக்கக்கூடிய நாடு அல்ல என்றும், மாறாக பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவர்கள் மற்றும் அதற்கு ஆதரவு அளிப்பவர்கள் மீது துல்லியமான தாக்குதல் நடத்தப்படும் என்பதை ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு எடுத்துரைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீரின் உதம்பூரில் உள்ள வடக்குப் பிராந்திய ராணுவ அலுவலகத்தில் வீரர்களுடன் நேற்று கலந்துரையாடியபோது இதனை அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் பயங்கரவாதிகளின் உள்கட்டமைப்பை அழிப்பதில் ஆயுதப் படைகள் மற்றும் உளவுத்துறை அமைப்புகள் ஒருங்கிணைந்து துணிச்சலாக செயல்பட்டதை அமைச்சர் பாராட்டினார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் கொள்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்றபட்டுள்ளதாகவும், ஒப்பிட முடியாத வீரம் மற்றும் அர்ப்பணிப்பு அதன் பின்னணியில் உள்ளது என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் என்பது வெறும் ராணுவ நடவடிக்கை மட்டுமல்ல எல்லைதாண்டிய பயங்கரவாதிகளுக்கும், பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்களுக்கும் இந்தியா விடுத்துள்ள எச்சரிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சென்னையின் அடையாளங்களில் ஒன்றான வள்ளுவர் கோட்டம் 80 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்.

முன்பு திறந்தவெளி அரங்கமாக இருந்த வள்ளுவர் கோட்டம், தற்போது ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட இருக்கைகளுடன் குளிரூட்டப்பட்ட அரங்கமாக மாற்றப்பட்டுள்ளது.

வள்ளுவர் கோட்டத்தில் உள்ள 106 அடி உயரம் கொண்ட மிகப்பெரிய தேரும் புதுப்பிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது.

நூலகம் மற்றும் ஆராய்ச்சி அரங்குகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

<<<<>>>>

கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 19 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இதனால் அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததன் காரணமாக கர்நாடகாவில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதனால் கர்நாடக அணைகளான கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மேற்காசியாவில் பதற்ற நிலை நீடிப்பதால் ஈரானில் இருந்து 290 இந்தியர்கள் சிறப்பு விமானத்தில் நேற்றிரவு தில்லி அழைத்து வரப்பட்டனர்.

<<<<>>>>

தஜிகிஸ்தானில் இன்று காலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4ஆக பதிவானது.

<<<<>>>>

இந்திய பாதுகாப்புத்துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் பாரீசில் நேற்று ஃபிரான்ஸ் பாதுகாப்புத்துறை அதிகாரிகளை சந்தித்துப் பேசினர்.

<<<<>>>>

காஞ்சிபுரத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட டென்னிஸ் மைதானத்தை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று திறந்து வைத்தார்.

<<<<>>>>

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மாமல்லபுரத்தில் உள்ள புராதன சின்னங்களை இன்று சுற்றுலாப் பயணிகள் கட்டணமின்றி பார்க்கலாம் என்று தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

<<<<>>>>

அரக்கோணம் - ஜோலார்பேட்டை வழித்தடத்தில் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால் வரும் 23ஆம் தேதி காட்பாடி – ஜோலார்பேட்டை பயணிகள் ரயில் ரத்து செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

கோவை மாவட்டம் வால்பாறை அருகே வனப்பகுதியை ஒட்டிய தேயிலை தோட்டத்தில் 4 வயது குழந்தையை கவ்விச் சென்ற சிறுத்தையை பிடிக்கும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

நாகர்கோவில் பணிமனையில் பராமரிப்பு பணி நடைபெற உள்ளதால், தாம்பரத்தில் இருந்து நாகர்கோவில் செல்லும் அந்தியோதயா எக்ஸ்பிரஸ் ரயில் நாளை முதல் அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை திருநெல்வேலி வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் பி.எட். மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்ப பதிவு இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் இன்று முதல் வழங்கப்படும் என்று சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சர்வதேச ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா பட்டம் வென்றார்.

பாரீசில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் சோப்ரா, 88 புள்ளி ஒன்று ஆறு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து சாதனை படைத்தார்.

ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 87 புள்ளி எட்டு எட்டு மீட்டர் தூரம் எறிந்து இரண்டாவது இடத்தையும், பிரேசிலின் **Luiz Mauricio Da Silva** 86 புள்ளி ஆறு இரண்டு மீட்டர் தூரம் எறிந்து 3வது இடம் பிடித்தனர்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

லீட்ஸ் மைதானத்தில் நேற்று தொடங்கிய இப்போட்டியில் முதல் இன்னிங்சில் இந்தியா முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 359 ரன் எடுத்தது.

கேப்டன் ஷுப்மன் கில் 127 ரன்னுடனும், ரிஷப் பந்த் 65 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக ஜெய்ஸ்வால் 101 ரன்னும், கே.எல். ராகுல் 42 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

<<<<>>>>

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்திய ஆடவர் அணி இன்று பெல்ஜியம் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பை வழங்குமாறு சர்வதேச ஒலிம்பிக் சங்கத்திடம் இந்தியா கோரியிருப்பது உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஒன்று என்று மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ரக்ஷா காட்சே தெரிவித்துள்ளார்.

**<<<<The End>>>>**